<u>தேதி - 26.09.2024</u>

<u>அசல் வழக்கு எண்.173/2004</u>

<u>வா.சா.2 - திருமதி. அம்சத்ராணி</u>

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>

தாவா மூன்று லக்கச் சொத்துக்களில் எனது தகப்பனாருக்கு பாகப்பிரிவினையில் எவ்வளவு அடியளவு ஒதுக்கப்பட்டுள்ளது என்று எனகது தெரியாது என்று சொன்னால் சரியல்ல, எனக்குத் தெரியும். அது எவ்வளவு அடியளவு என்றால் 1 வது லக்கச் சொத்தில் கீழவெளிவீதி, கதவு எண்.28 சுமார் 370 சதுரடியும், 2 வதுலக்கச் சொத்து நாகூர்தோப்பு 3,100 சதுரடியும், 3 வது லக்கச் சொத்து 16-1/2 செண்டும் அளவு ஆகும்.

தாவாச் சொத்துக்கள் ஒவ்வொன்றும் எவ்வளவு மதிப்பு என்றால் எனக்குத் தெரியாது.

தாவாச் சொத்துக்கள் மார்க்கெட் மதிப்பை காட்ட நீதிமன்றத்தில் இன்று வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

நான் தாவாச் சொத்துக்களின் கூட்டு அனுபவத்தில் இல்லாமல் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக பொய்யாக சொல்லி தாவாச் சொத்துக்களின் மதிதப்பை மிக குறைவாக காண்பித்து, மிக குறைவான நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

தாவாச் சொத்துக்களுக்கு நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறு என்று சொன்னால் சரியல்ல.

16.09.1988 பாகப்பாத்திய விடுதலை பத்திரம் மற்றும் சமரசபத்திரங்களின் அடிப்படையில் எனக்கு எவ்வித பங்கும், உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மேற்படி ஆவணங்களை மறைத்து பொய்யான சங்கதிகளுடன் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

4ம் பிரதிவாதியான சகிதா என்னுடன் ஒத்துழைக்கவில்லை என்ற காரணத்தினால் அவர் ப 8ம்பிரதிவாதியாக அவர் மாற்றம் செய்ப்பட்டார் என்று சொன்னால் சரியல்ல.

உண்மையில் 8ம் பிரதிவாதி 16.09.1988ம் தேதிய பாகப்பாத்திய விடுதலை பத்திரத்தில் தரப்பினராக கையொப்பம் இட்டுள்ளதால் அதனடிப்படையில் 24.01.1990 அன்று அவருக்கு கிடைத்த சொத்தை காந்தியம்மாள் என்பவருக்கு கிரையப்பத்திரம் எழுதிக் கொடுத்தள்ளதாலும், அவர் சாட்சியம் அளித்தால் மேற்படி உண்மைகள் தெரிய வரும் என்பதால் அவர் வேண்டுமென்றே 8ம் பிரதிவாதியாக மாறுதல் செய்யப்பட்டார் என்று சொன்னால் சரியல்ல.

16.09.1988ல் நான் மைனராக இருந்ததால் பாகப்பாத்திய விடுதலைப்பத்திரத்தில் கையொப்பம் இடாத வாதிகளில் மிகவும் இளையவரான என்னை வேண்டுமென்றே உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

தாவா வழக்கு பொய் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

ஒப்பம் /-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

J.TAMILARASI,
முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.